**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 691/2016**

நாள் 02.12.2024.

PW1 – மனோகரன்

த/பெ – ராஜமாணிக்கம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of December 2024.)**

**3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து முறியாண்டம்பாளையம் கிராமத்தில் 1.78 ஏக்கர் உள்ளது. தாவா சொத்து முறியாண்டம்பாளையம் கிராம சர்வே எண்.82–ல் 3.28 ஏக்கர் சொத்தை விற்று விட்டு சர்வே எண்.134–ல் 1.78 ஏக்கர் சொத்தை கிரையம் பெற்றேன். அந்த 1.78 ஏக்கர் சொத்தை மோகன்ராஜ், கலாவதி, ஜெகதீஸ் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றேன். யார் யார் கிரையம் பெற்றார்கள் என்றால் நானும் 1–பிரதிவாதியும் சேர்ந்து கிரையம் பெற்றோம். அந்த கிரைய பத்திரத்தில் வா.சா.ஆ.2–ல் என்னுடைய விலாசமாக சேயூர், கஸ்பா, ஏரி மேடு, கதவு எண்.460 வீட்டு விலாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது நிரந்தர முகவரி இல்லை. மேற்படி முகவரி தான் என்னுடைய நிரந்தர விலாசம்.

2. மேற்படி வீதம் நான் கிரையம் பெற்ற பிறகு புளியம்பட்டிக்கு எனது தங்கை மகளான அமுதா வீட்டிற்கு சென்று விட்டேன். அந்த அமுதா வீடானது புளியம்பட்டியில் பன்னீர் செல்வம் வீதியில் உள்ளது. கதவு எண். தெரியாது. நான் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே சர்க்கரை நோயால் எனது வலது கால் எடுக்கப்பட்டுவிட்டது. நான் புளியம்பட்டியில் வசித்து வந்தபோது வீட்டிலேயே தான் இருந்து வந்தேன் என்றால் சரிதான், அவ்வப்போது மருத்துவமனைக்கு சென்று வந்தேன். அவ்வாறு

சிகிச்சைக்கு செல்லும்போது மருத்துவமனையில் என்னுடைய முகவரியை கேட்டு எழுதுவார்கள் என்றால் சரிதான். அது சம்பந்தமப்பட்ட மருத்துவ குறிப்புகள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. எனது கால் ஊனத்தை எப்போது பதிவு செய்தேன் என்றால் 1996–ஆம் ஆண்டில் பதிவு செய்தேன். எனது கால் ஊனத்திற்காக வேண்டி நிவாரணமாக அரசிடமிருந்து நான் எந்த தொகையும் பெறவில்லை. நான் நிவாரணம் பெற விண்ணப்பிக்கவே இல்லை. இதுநாள் வரையில் எனக்கு சேயூர் விலாசத்தில் தான் வாக்காளர் உறுப்பினர் அடையாள அட்டை உள்ளது. எனக்கு குடும்ப அட்டை இல்லை. என்னுடன் பிறந்த ஆனந்த் கடந்த 3 வருடத்திற்கு முன்பே இறந்து போய்விட்டார். நாங்கள் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் இல்லை, தனித்தனியாக தான் வசித்து வந்தோம். நானும், 1–ம் பிரதிவாதி ரவியும் சேர்ந்து இறந்துபோன 2–ம் பிரதிவாதி தேவி சரஸ்வதி என்பவருக்கு கடந்த 15.11.2007–ம் தேதியில் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் இல்லை. அதில் முன்பணமாக ரூ.1,00,000/–த்தை நாங்கள் இருவரும் வாங்கி கொண்டோம் என்றால் இல்லை. பாக்கி கிரைய தொகை ரூ.50,000/– ஐ பதினொரு மாத கால அவகாசத்திற்குள் பெற்றுக்கொண்டு கிரையம் பெற்றுக்கொள்வது என்றால் அது பொய். அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தின் பேரில் தேவி சரஸ்வதி 01.07.2008–ம் தேதியில் கிரையம் செய்து கொடுக்க கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால், அது பொய். நான் அந்த அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தின் பேரில் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.283/2008 என்ற வழக்கை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கேட்டு தாக்கல் செய்து அதில் எனக்கும், ரவிக்கும் அழைப்பாணை வந்தது என்றால் சம்மன் எதுவும் எனக்கு வரவில்லை.

நான் சொல்வது பொய் என்றும், எனக்கு முறையாக சம்மன் வந்தது என்றும் ஆனால் நான் அதை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த அழைப்பாணை ஆனது வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் கண்ட எனது வீட்டு முகவரிக்குத் தான் வந்துள்ளது என்று சொன்னால் என்னுடைய வீட்டு முகவரிக்கு எந்தவொரு அழைப்பாணையும் வரவில்லை. அந்த முகவரிக்கு நீதிமன்றில் இருந்து அமீனா மூலம் சம்மன் வந்தது என்றும் ஆனால் அதை வாங்காமல் மறுத்து அனுப்பி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

4. பின்பு அந்த வழக்கில் நான் ஆஜராகததால் தான் எனக்கு எதிராக ஒரு தலை பட்ச தீர்ப்பாணை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கில் மீதி கிரைய தொகையான ரூ.50,000/- நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள விபரம் எனக்குத் தெரியாது. மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்ட்ட தீர்ப்பாணையின் பேரில் தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் எழுதி கொடுக்க கேட்டு திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.9/2009 என்ற மனுவை தாக்கல் செய்து அதில் எனக்கு அறிவிப்பு வந்தது என்றும், அந்த அறிவிப்பையும் நான் வாங்காமல் நிராகரித்து திருப்பி அனுப்பிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எனக்கு வரப்பெற்ற அறிவிப்பை வாங்காமல் நாங்கள் நிராகரித்து விட்டதின் பேரில் எங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டு பின்பு நீதிமன்றமே 02.07.2009-ம் தேதியிட்ட அவிநாசி சார்பதிவக கிரைய ஆவண எண்.7538/2009 என்ற கிரைய ஆவணத்தை 2-ம் பிரதிவாதி தேவி பெயருக்கு எழுதி பதிவு செய்து கொடுத்தது என்றால் அது எனக்குத் தெரியாது. பின்பு நீதிமன்றம் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பேரில் சொத்தின் சுவாதீனத்தை எழுதி கொடுக்க கேட்டு நிறைவேற்று மனு

எண்.75/2009 என்ற மனுவை 2-ம் பிரதிவாதி தாக்கல் செய்து அதில் எங்களுக்கு அறிவிப்பு வந்தது என்றும், நான் அந்த அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் வாங்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல, அறிவிப்பே எனக்கு வரவில்லை. நான் அந்த அறிவிப்பை வாங்க மறுத்து விட்டதால் எனக்கு எதிராக நீதிமன்றம் ஒருதலைபட்ச உத்தரவி பிறப்பிக்கப்பட்டு சொத்தின் சுவாதீனத்தை எடுக்க வேண்டி உத்தரவு பிறப்பித்தின் பேரில் 18.02.2010-ம் தேதியில் நீதிமன்ற அமீனா மூலம் சொத்தின் சுவாதீனத்தை 2-ம் பிரதிவாதி வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. அமீனா வந்த விபரம் எனக்குத் தெரியாது.

5. மேற்படி வீதம் எல்லா நடவடிக்கையிலும் எனக்கும், 1-ம்பிரதிவாதி ரவிக்கும் நீதிமன்றத்திலிருந்து முறையாக அறிவிப்பு வந்தது என்றும் ஆனால் நாங்கள் தான் அந்த அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் வேண்டுமென்றே நிராகரித்து விட்டு தற்போது இந்த வழக்கிற்காக வேண்டி எந்தவொரு சம்மனும், அறிவிப்பும் எங்களுக்கு வரவே இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 2-ம் பிரதிவாதி தேவி சரஸ்வதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ள விபரம் எனக்குத் தெரியும் என்றால் எனக்கு எதுவும் தெரியாது. தாவா சொத்திற்கு 2-ம் பிரதிவாதி தான் கந்தாய தீர்வை வரி செலுத்தி வந்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் 2-ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்து வந்து அவர் இறந்து போன பிறகு அவரது வாரிசுகளான 3 முதல் 6 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் அதுவும் எனக்குத் தெரியாது. மேற்படி வழக்கின் தொடர் நடவடிக்கைகள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரிந்திருந்தும், இந்த வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல. நான் புளியம்பட்டி விலாசத்தில் வசித்து வருகிறேன் என்பதை காட்ட அது சம்பந்தப்பட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் புளியம்பட்டியில் உள்ள அமுதா வீட்டில் வசித்து வருகிறேன் என்று இந்த வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த காலத்திலும், தாக்கல் செய்த தேதியான 22.12.2016–ம் தேதியிலும் புளியம்பட்டியில் தான் வசித்து வந்ததாக புளியம்பட்டி முகவரியை காட்டிதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் புளியம்பட்டி விலாசத்தில் வசித்து வந்ததாக சொல்வது பொய் என்றும், நான் சேயூர் ஏரிமேடு விலாசத்தில் தான் வசித்து வந்தேன் என்றும் இந்த வழக்கிற்காக வேண்டி தான் பொய்யாக புஞ்சை புளியம்பட்டி விலாசத்தில் வசித்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அ.வ.எண்.283/2008 வழக்கில் 24.09.2008–ம் தேதியில் தீர்ப்பாணை ஏற்பட்ட விபரமும், அதனை தொடர்ந்து நீதிமன்றம் 02.07.2009–ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை 03.07.2009–ம் தேதியில் அவிநாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்த விபரமும் மற்றும் சொத்தின் சுவாதீனத்தை நீதிமன்றம் மூலம் 2–ம் பிரதிவாதிக்கு எடுத்து ஒப்படைக்கப்பட்ட விபரமும் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டி காலதாமதம் ஏற்பட்டு விட்ட காரணத்தினால் தான் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அ.வ.எண்.283/2008 வழக்கில் 24.09.2008 ம் தேதியில் பிறந்த ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய கேட்டு முறையாக மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய காலம் கடந்து விட்டதால்

தான் அந்த வழக்கில் உரிய மனுவை தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/-C.Senthil Kumar**
**Subordinate Judge,**
**Avinashi.**